LIBRARY
14 MAR 1962
LEGISLATURE, MA

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Thursday, 24th August 1961.

The House met in the Assembly Chamber, Fort St. George at half past eight of the clock, the Deputy Speaker (Sri B. BHAKTAVATSALU NAIDU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

DEPUTY SPEAKER : Question Nos. 1371, 1377, 1378 and 1384 will be taken up sometime later, as the concerned Ministers are not here. We shall therefore take up the other questions.

Compulsory education

*1372 *Q.*—SRI K. R. NALLASIVAM (on behalf of SRI A. R. MARIMUTHU) : கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கட்டாயக் கல்வி அமுலில் உள்ள பகுதிகளில் அங்குள்ள படிக்கும் வயதுவந்த பிள்ளைகள் அனைவரையும் பள்ளியில் சேர்ப்பதற்கு என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன ?

(இ) பள்ளிக்குப் பிள்ளைகளை அனுப்பாத பெற்றோர்களின்மீது எதாவது நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுகிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) and (இ) A statement[a] is laid on the table of the House.

SRI K. VINAYAKAM : Sir, it is stated in the paper placed on the table of the House that the penal clauses of the Elementary Education Act are enforced against the defaulters and it is also stated therein that about 2,000 persons or so had been brought under those penal provisions. May I know what exactly the penalties are, i.e., whether fines had been imposed on them, or whether they had simply been reprimanded, or what sort of punishment had been inflicted on them?

THE HON. SRI C. SUBRAMANIAM : Though the provisions enable the imposition of fines, generally, they are reprimanded and they are advised to send their children to school.

SRI S. RAMALINGA PADAYACHI : இந்தக் கட்டாய கல்விப் பிரதேசத்தில் குழந்தைகளுக்கு மூன்று வேளை சாப்பாடுபோட்டால் தான் எல்லாப் பிள்ளைகளும் வருவார்கள். நாம் ஏற்கனவே உடை வாங்கித்தருகிறோம், புத்தகம், பலகை வாங்கித்தருகிறோம், மதிய உணவு போடுகிறோம். ஆனால் இவ்வளவு வசதி செய்தும் ஏழைப்பிள்ளைகளை பெற்றோர்கள் பள்ளிக்கு அனுப்புவது இல்லை. கூடவே பள்ளிக்கு பிள்ளையை அனுப்பவில்லையென்று பெற்றோர்களுக்கு அபராதம் விதிப்பதானது பெரிய

[a] Printed as Appendix I on page 837 infra.

[24th August 1961

சர்ச்சையை எழுப்புகிறது. இதற்கு இடம் இல்லாமல் நமது முதல் அமைச்சர் காலத்திலேயே மூன்று வேளை சாப்பாடு போட ஏற்பாடு செய்வார்களா? இது நம்முடைய முதல் அமைச்சரின் கனவாகும். இதை அவர் காலத்திலேயே செயல்படுத்த தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா? அப்போது சர்ச்சையில்லாமல் யாவரும் படிக்க வருவார்கள்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இன்னும் மூன்று வேளையும் சாப்பாடு போடுகிற திட்டம் வரவில்லை. போர்டிங் ஹௌசில் சேர்ந்து படித்தால்தான் அவ்வசதி கிடைக்கும். ஏழை எளிய அநாதை மாணவர்களுக்கு அப்படிச் செய்கிறோம். பொதுவாக எல்லாயிடங்களுக்கும் இத்திட்டத்தை அமுல் செய்வது கஷ்டமாக இருக்கும்.

SRI T. S. RAMASWAMI: May I know the percentage of enrolment of school-going children in these areas?

THE HON. SRI C. SUBRAMANIAM : Though I won't claim 100 per cent, I may state that it is nearabout 100 per cent.

SRI M. K. SOMASUNDARAM : தமிழ்நாடு பூராவுக்கும் எப்போது கட்டாயக் கல்வி கொண்டுவரப்படும்?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதற்காக ஒரு திட்டம் போடப்பட்டிருக்கிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவிற்குள்ளாக எல்லோரையும் கொண்டுவந்துவிட வேண்டும் என்பது திட்டம்.

SRI K. VINAYAKAM : Is the Hon. Minister aware of the fact that these statistics of non-school-going children are prepared only by the teachers employed in the various schools in that area and not by the Education Department and hence they may not be foolproof statistics? If so, will the Government take steps to make the officers of the Education Department, like the Deputy Inspector or District Educational Officer responsible for preparing these statistics?

THE HON. SRI C. SUBRAMANIAM : Then, it can never be completed. This work had to be done by someone who was on the spot and so, the teachers were considered the best agency. We have to trust that agency to a certain extent. After all, in this matter, they are not interested in showing any false figures.

SRI S. PAKKIRISAMI PILLAI : சென்னை நகரத்தில் இருக்கிற பள்ளிக்கூடகட்டிடங்களுக்கு போதுமான இடவசதி இல்லாத காரணத்தினால் பல பிள்ளைகள் இடம் கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். அந்தப் பிள்ளைகளுக்குப் படிப்புச் சொல்லிக்கொடுக்க இடம் கண்டுபிடிக்க என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதைப் பற்றி கார்ப்பரேஷன் அதிகாரிகளுக்கு அரசாங்கத்தார் உத்தரவு போடுவார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM : இது கார்ப்பரேஷன் செய்யவேண்டியது. கார்ப்பரேஷனும் தங்கள் கடமையை உணர்ந்து கட்டிடம் கட்டிக் கொண்டு வருகிறார்கள். வாடகைக்கும் கட்டிடம் எடுத்துக் கொண்டு வருகிறார்கள். இடைக்காலத்தில் இந்தக் கஷ்டம் ஏற்படத்தான் செய்யும். இந்தக் கஷ்டங்களையும் மீறிக்கொண்டுதான் நாம் காரியங்களைச் செய்ய வேண்டும்.

Poramboke lands (Nilgiri division)

*1373 *Q.*—SRI S. PAKKIRISAMI PILLAI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether an order for eviction has been given, by the service of the B Memorandum under section 7 of the Madras Act